# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1982 ★ இதழ் - 83


## பனங்கொட்டைக்குப் பந்து



**மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் முழுநேர வேலையாகப் பனங்கொட்டை சேகரிப்பதில் ஈடுபட்டு ஆண்டு தோறும் புதிய முறைகளைக் கையாண்டு வெற்றியீட்டி வருகிறார். இது நாம் சொல்லி நீங்கள் அறிவதல்ல. தமிழ்நாட்டுப் பனையபிவிருத்தி நிபுணர் கலாநிதி கூ. சம்பந்தம் அவர்கள் குமரப்பா புரத்தாருக்குக் கூறுவதற்கு எடுத்துச் செல்லும் செய்தி.**

பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் பனங்கொட்டை என்றதும் பந்து நினைவுக்கு வருகிறது. முன்னர் பல்லாயிரம் பனங்கொட்டை பாடசாலைகளுக்கு ஓடுகள், படிப்பகங்கள், பிரார்த்தனை மேடைகள், நீர்த்தொட்டிகள், நீரிறைக்கும் யந்திரங்கள் முதலிய பரிசுகளைக் கொடுத்தன. பனங்கொட்டை முளைக்க முன்னரே பாடசாலைகள் பயன்பெற்று வந்தன.



நிலக்கடலை சம்பந்தமான புத்தகத்தை மில்க்வைற் தொழிலதிபர் வெளியிடுகையில் அதன் முதற் பிரதியை விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. S. R. அரசசிங்கம் பெற்றுக்கொள்கிறார்.

அண்மையில் தனிப்பட்ட மாணாக்கர்கள் 2000 பனம் விதைகள் ஒரே மூச்சில் பொறுக்கித் திரட்டிக் கொடுத்து விலையுயர்ந்த ''புற்போல்'' என்னும் உதைபந்து பெற்றுப் பீடுநடை போட்டுப் போகிறார்கள்.

இவர்களையெல்லாம் கடைக்கண்ணாற் கண்டு மகிழ்ந்த கலாநிதி சம்பந்தம், கனகராசா அவர்களைப் பாட்டுடைத் தலைவராக்கி வில்லுப்பாட்டு இயற்றித் தாமே பாடிக் காட்டியுள்ளார்.

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருக்காளத்தி — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே.

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகங்களையும் காப்பவரும் படைப்பவரும், வேதங்களின் பொருளாய் உள்ளவரும், ஞானத்தின் கரையை அடைவதற்குத் தோணி போன்றிருப்பவரும், நிறைந்தவரும், அறத்தின் வடிவமாயுள்ளவரும், பழைமை யானவரும், சடா முடிமேல் கங்கைப் பெருக்கினையுடைய வரும், புனிதமானவரும், எங்கும் இயங்குபவரும், தட்ப வெட்பமாய் உள்ளவரும், தன்னொப்பார் இல்லாத பெருமை உள்ளவரும், தானே எவ்வுயிரிலும் தங்குபவரும், தக்கவர்களுக்கெல்லாம் தானே முதல்வரானவரும், திருக் காளத்தியில் எழுந்தருளியுள்ள கணங்களுக்கெல்லாம் தலை வருமான சிவபெருமான் என் கண்களில் நிறைந்துள்ளவ ராவர்.

## அலையாத இன்பம்

(சுவாமி கெங்காதரானந்தா)

கறள் பிடித்த இரும்பைக் காந்தம் ஈர்க்காதது போன்று, அழுக்கு நிறைந்த மனதைத் தெய்வீக ஒளி கவர்ந்து எடுப்பதில்லை.

உனது இதயத்தைத் தூய்மைப்படுத்துக. அப்பொழுது சிந்தனைசக்தியும் செயலாற்றும் திறமையும் அற்புதகரமான ரீதியிற் பெருகும்.

நீ தெய்வத்தைப்பார்க்கவில்லை என்றாலும் தெய்வம் உன்னைப் பார்க்கிறது.

கண்கள் உலகத்தைப் பார்க்கும் சக்தி இழந்தாலும், தெய்வத்தைப் பார்க்கும் சக்தியை இழப்பதில்லை.




## பிறனில் விழையாமை

(பிறன் மனையாளைக் காமத்தால் விரும்பாமை)

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

வேறொருவனின் மனைவியை விரும்பிப் பாரிக்காத பெரிய வீரம் நல்லவர்க்கு முறையானதாகும். அன்றி அது தலைசிறந்த நல்லொழுக்கத்தையும் தருவதாகும்.

**Not Desiring another man's wife**

The supreme heroism of the wise which would never look at another's wife - this is not only virtue, but perfection of conduct.

## 1982 நவெம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | பூரணை விரதம் |
| | | | திருமூலநாயனர் குருபூசை |
| 2 | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் |
| 11 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 13 | சனி | — | சனிப்பிரதோஷ விரதம் |
| 14 | ஞாயிறு | — | தீபாவலி |
| | | | மெய்கண்டார் குருபூசை |
| 15 | திங்கள் | — | அமாவாசை விரதம் |
| 16 | செவ்வாய் | — | கந்தஷஷ்டி ஆரம்பம் |
| 17 | புதன் | — | தமிழ் கார்த்திகை மாதப் பிறப்பு |
| 21 | ஞாயிறு | — | கந்தஷஷ்டி முடிவு |
| 26 | வெள்ளி | — | இராமநாதன் மறைந்த நாள் |
| 27 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 28 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 30 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| | | | திருக்கார்த்திகை விளக்கீடு |

MWS MILKWHITE **மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள்.
நாங்கள் தபாற்செலவு கட்டி செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் „ 2
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த.பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

★ **துன்பங்களுக்குக் காரணம் அறியாமை** ★


முற்றொடர்:-

## வழக்கில் உள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| பரப்பிரமம் | — | மிகப் பெரியது |
| பரமாதிசயம் | — | மேலான வியப்பு |
| பரமசத்துரு | — | கடும் பகைவன் |
| பரமசந்தோஷம் | — | பேருவகை |
| பரமசுகம் | — | மேலான இன்பம் |
| பரமபதம் | — | வீடுபேறு |
| பரமரகசியம் | — | அருமறைப்பொருள் |
| பரமன் | — | மேலான கடவுள் |
| பரமவியோமம் | — | அருள்வெளி |
| பரமாத்மா | — | இறைவன் |
| பரமாநந்தம் | — | பேரின்பம் |
| பரமார்த்தம் | — | மெய்ப் பொருள் |
| பரமுத்தி | — | வீடுபேறு |
| பரமேஸ்வரன் | — | சிவன் |
| பரமேட்டி | — | மேலான இடத்தவன் |
| பரம் | — | மேன்மை |
| பரம்பரை | — | தலைமுறை |
| பரம்பொருள் | — | முதற்பொருள் |
| பரலோகம் | — | மேலுலகம் |
| பரன் | — | கடவுள் |
| பராக்கிரமசாலி | — | ஆண்டகை |
| பராசக்தி | — | இறைவி |

## பெரிய தொடரைக் குறிக்கும் சிறிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அத்தை மகன் | — | அத்தான் |
| 2. | அத்தை அன்பர் | — | அத்தின் பேர் |
| 3. | அந்த நாள் | — | அந்நாள் |
| 4. | அம்மான் மகள் | — | அம்மங்காள் |
| 5. | அருமருந்தன்ன | — | அருமந்த |
| 6. | அன்ன வண்ணம் | — | அன்னணம் |
| 7. | ஆகும்பொழுது | — | ஆம்போது |
| 8. | இந்த நாள் | — | இந்நாள் |
| 9. | இன்ன வண்ணம் | — | இன்னணம் |
| 10. | எந்த நாள் | — | எந்நாள் |
| 11. | எமது பிரான் | — | எம்மான் |
| 12. | எனது அன்னை | — | என்னை |
| 13. | என் தந்தை | — | எந்தை |
| 14. | என் தம்பி | — | எம்பி |
| 15. | சிறிய அம்பலம் | — | சிற்றம்பலம் |
| 16. | சிறிய அன்னை | — | சிற்றன்னை |
| 17. | பெண் தன்மை | — | பெண்மை |



## பஞ்சதந்திரம்

1. இதமான வார்த்தைபேசி விபரீத காரியம் செய்பவன் நண்பன் உருவில் வந்த எதிரி.
2. இடத்துக்கும் காலத்துக்கும் பொருந்தாத யோசனைகளைக் கேட்டு நடந்தால் பொருள் செலவாகிவிடும்.
3. குலம், குணம், அந்தஸ்து, கல்வி, செல்வம், அழகு, இளமை என்னும் ஏழு தகுதிகளையும் அறிந்தே பெண் கொடுத்தனர்.
4. தீர்க்கதரிசனமும் பரம்பரைச் சேவையும் உள்ள மந்திரிகளால் நாடு நன்மையடையும்.
5. துரிதமாகச் செய்யவேண்டிய காரியத்தைத் தாமதப் படுத்தினால் தேவர்கள் கோபமடைந்து அதைத்தடை செய்கிறார்கள்.
6. கெட்டகாலம் வரும்போது நல்லகாலத்தை எதிர் நோக்கியவாறு புத்திசாலிகள் நெஞ்சைக் கடினமாக்கிக் கொள்கிறார்கள்.
7. உடம்பை அசைக்காத சோம்பேறிக்குப் புகழ்கிடையாது. பதட்டமுள்ளவனுக்கு நண்பர்கள் கிடைக்க மாட்டார்கள். கவனம் இல்லாதவனுக்குத் தொழில் கிடைக்கமாட்டாது.
8. காட்டில் பற்றி எரியும் நெருப்பு மரத்தைச் சுட்டுப் பொசுக்கினாலும் வேரையாவது காக்கிறது: ஆனால் குளுகுளுவெனப்பாயும் ஆறு மரத்தை வேரோடு பெயர்த்து எறிகிறது.

## பனை மர சோபனம் மறுபதிப்பு

பனை மரமே பனை மரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே எனத் தொடங்கும் பனை மர விருத்தாந்தப் பாடலின் முதலிரு வரிகள் மாத்திரம் தாம் கேட்டதாகவும், அதன் முழுப் பாடலும் இதுவரை தாமறியவில்லை என்றும், பனையபிவிருத்தி நிபுணர் கலாநிதி சம்பந்தம் அன்று உரையாடலின் போது கூறினார்.

அதைக் கேட்டதும் தொழிலதிபர் கனகராசா உடனடியாக அந்நூலின் மறுபதிப்பைத் தயாரித்து சம்பந்தம் அவர்கள் கொண்டு செல்லக் கூடிய அளவில் அன்பளிப்பாக உதவினார்: ''தமிழ் நாட்டவருக்கு இந்நூல் பெரு விருந்தாக இருக்கும்'' என்று சம்பந்தம் நன்றி தெரிவித்தார்கள்.

★ தியானம் கடவுளைக் காட்டும் கண் ★

முற்றொடர்:-

## தொகையகராதி

### — நான்கு —

1. நூற் பயன்

| | |
|---|---|
| அறம் | இன்பம் |
| பொருள் | வீடு |

2. பக்கம்

| | |
|---|---|
| முன் பக்கம் | இடப் பக்கம் |
| பின் பக்கம் | வலப் பக்கம் |

3. பச்சைச் செடி

| | |
|---|---|
| கதிர்ப் பச்சை | மலைப் பச்சை |
| திருநீற்றுப் பச்சை | மாசிப் பச்சை |

4. படைச் சிறப்பு

| | |
|---|---|
| வீரம் | நல்வழி |
| பெருமை | நம்பிக்கை |

5. பண்

| | |
|---|---|
| பாலை | மருதம் |
| குறிஞ்சி | செவ்வழி |

6. பதவி

| | |
|---|---|
| சாலோகம் | சாரூபம் |
| சாமீபம் | சாயுச்சியம் |

7. பரிசம்

| | |
|---|---|
| சீதல் | மிருது |
| உட்டிணம் | கடினம் |

8. பருவம் (பெண்)

| | |
|---|---|
| பால | பிரவிடை |
| தருணி | விருத்தை |

## வேடிக்கைப் பழமொழி

1. மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்குமா?
2. மாமியார் வீடு மகாசௌக்கியம்.
3. மிளகளவு பிள்ளையாருக்குக் கடுகளவு நைவேத்தியம்.
4. முகக்கோணலுக்குக் கண்ணாடி பார்த்தால் தீருமா?
5. மூக்காற் பணத்துக் குதிரை மூன்றுபணத்துப் புல் தின்னும்.
6. முட்டாளுக்கு என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.
7. முட்டையிடுகிற கோழிக்கு எரிச்சலும் உண்டு.
8. முந்தானை இருக்கிறது நாலு வீடு இருக்கிறது.
9. முளைத்த மயிர் மூன்று அதிலும் இரண்டு புழுவெட்டு.
10. முறத்தடிபட்டாலும் முகத்தடி படலாகாது.
11. மூக்கு மயிர் பிடுங்கி ஆட்பாரம் குறையுமா.
12. மெத்தை நேர்த்தி தலையணை பீற்றல்.
13. மேயப்போகிற மாடு கொம்பிலே புல்கொண்டு போகிறதா?
14. மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்ததாம்.
15. மொட்டைத் தலையில் பேன் சேருமா?
16. யானையைத் தேடிக் குடத்துள் கை விட்டானாம்.

## தொழிலகத்துக்கும் தொழிலதிபருக்கும் 55

மில்க்வைற் தொழிலகமும், தொழிலதிபர் கனகராசா அவர்களும் தோன்றிய ஆண்டு 1927 எனவே 55 ஆண்டுகள் நின்று நிலவிய தொழிலகமும், நிர்வாகப் பொறுப்பேற்ற கனகராசாவும் இரட்டைப் பிள்ளைகள்.

கனகராசா அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்தல் வேண்டும் என்று உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பல வாழ்த்துகள் வந்து குவிந்துள்ளன. தமிழ் நாட்டின் அழகாபுரி அழகுதாசன் அன்று பாடிய பாடல்களில் ஒன்றைப் படித்து நாமும் வாழ்த்துவோமாக.

''குறளமைத்த வள்ளுவனார் சொல்லி வைத்த
கொள்கையினால் செல்வாக்கை குவித்து வாழ்க!
இருளகற்றும் ஒளிவிளக்காய் வாழ்ந்து வந்த
இதயங்கள் இன்னும்நூ றாண்டு வாழ்க!
திருமகளும் கலைமகளும் தினமும் உங்கள்
திசைபார்த்து வீற்றிருக்கச் செழித்து வாழ்க!
மருக்கொழுந்தும் வாசமும் போல் இனிமை மிக்க
மணித்தமிழும் ஓசையும் போல் மலர்ந்து வாழ்க.''

## திருவாதவூரடிகள் புராணம்

திருவாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு பெரிய புராணத்தில் இடம்பெறாமையால், பின்வந்த கடவுண்மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தைப் பாடியருளியுள்ளார்.

திருவாதவூரடிகள் புராணம் திருவெம்பாவை நாட்களில் திருக்கோயில்களில் படித்துப் பயன் சொல்லப் பெற்று வந்தது. கந்தபுராணம் போலப் பக்தி சிரத்தையோடு புராண படனஞ் செய்யப் பெற்று வந்த புராண நூலுக்கு உரையாசிரியர் மட்டுவில் வேற்பிள்ளை அவர்கள் அகலவுரை எழுதியுள்ளார். அவற்றைப் படித்து விளங்கிக் கொள்ள முடியாதவர்களின் நன்மை கருதி சைவமணி சி. மருதபிள்ளை அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார். பிழைகள் இல்லா வகையில் மூலத்தையும் பொழிப்புரையையும் வழக்கம்பரை பஜன சபையினர் வெளியிட்டுள்ளார்கள். இவற்றை காரைநகர் பாலா அச்சகத்தார் அழகாக அச்சிட்டுள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் எங்கள் பாராட்டு உரியதாகுக.

## ஊரெழு அன்பரின் உபகரிப்புகள்

ஊரெழு வாசர் மலேசிய தம்பிராசா அவர்களும் பாரியாரும் மில்க்வைற் வெளியீடுகளைத் தவறாது பெற்றுப் படிப்பதோடு, தொழிலதிபர் செய்துவருகின்ற மரம் நாட்டும் பணிக்குந் தங்களால் இயன்றளவு மரக்கன்றுகளைக் காலந்தோறும் உபகரித்து மகிழ்பவர்கள். அவர்கள் உபகரித்த கன்றுகள் பல மரங்களாகி வளர்ந்து கனியுதவுகின்றன; அவை ஊரெழு அன்பர்களின் கதை பேசுகின்றன. அவர் ஆண்டுதோறும் உபகரிக்கும் பனம் விதைகள் வரண்ட பிரதேசங்களில் வளர்ந்து பயன் தரும் பனைகளாகிவிட்டன.

★ நமது பெருமை சிறுமைக்கு நாமே பொறுப்பாளி ★

## கந்தஷஷ்டி

கந்தசுவாமிக் கடவுளுக்குரிய ஆறு நாள் விரதம் கந்தஷஷ்டி. ஐப்பசி மாதத்து அமாவாசை - தீபாவளி கழித்து பிரதமைதிதி தொடக்கம் ஷஷ்டி திதிவரை ஆறு நாட்கள் வெகு புனிதமானவை.

ஆறுநாட்களிலும் உபவாசம் எனப்படும் உணவின்மை மிகமேலான தவமாகும். அதுவும் முருகனாலயத்தையண்டி ஞானவொடுக்கத்தமர்தல், ஞானிகளோடு இருத்தல், இயன்றளவு மௌனமாகத் தியானித்தல், புராணபடனங் கேட்டல் முதலியன அவரவர் சக்திக்கும் விருப்பத்துக்கும் ஏற்பச் செய்யத்தக்க கருமங்கள் - நல்லறங்களாம்.

முருகனாலயங்களில் கந்தபுராணம், மயூரகிரிப்புராணம், திருச்செந்தூர்ப் புராணம், தணிகைப்புராணம் முதலியன படித்துப் பயன சொல்வார்கள். சிலர் தனிப்பட்ட முறையில் கந்தரலங்காரம், கந்தரனுபூதி படித்துப் பேருரை நிகழ்த்துவார்கள்.

முன்னர் முசுகுந்த சக்கரவர்த்திக்கு முனிசிரேட்டரான வசிட்டர் உபதேசித்த வண்ணம் கந்தசஷ்டி விரதம் பூவுலகிற்பரவி நாட்டை வாழ்வித்து வருகிறது.

கந்தஷஷ்டியில் உபவாசம் இருக்கமாட்டாதவர்கள் ஒருவேளை உண்டு விரதம் அநுட்டிக்கலாம் என்பர். அதுவும் இயலாதவர்கள் பகல் ஒருபோது உண்டு இரவில் பலகாரவகை கொள்ளலாம் என்பர்.

[அதுவும் இயலாதவர்கள் வழமைபோல் உண்டு ஆசாரசீலராய் வாழ்ந்து, நற்பணிகள் செய்து, இறைவனை வழிபட்டு, மற்றவர்களுக்குத் தீமை செய்யாது வாழ்வாராக.]

## விளக்கீடு

[இம்மாத நிகழ்ச்சிகளுள் மிகவும் அருமையாக அமைந்த புனித புண்ணிய நாள் 30-11-82 ஆகிய செவ்வாய்க்கிழமையாகும். அன்று திருக்கார்த்திகை விரதமும், பூரணை விரதமும் அமைந்த மங்கள வாரமாகும். அன்றி இச் சம்பவ விசேடத்தால் அன்று குமாராலய தீபமும், விஷ்ணுவாலய தீபமும், சர்வாலய தீபமும் கூடியமைந்துள்ளன. அவ்வரிய சந்திப்புச் சம்பவம் அருமையானது மங்களகரமானது.]

விளக்கீடு விளக்கு இடுதல் என்னும் பொருள் தருவது. விளக்கு வரிசைகள் காணும் இடங்கள் எல்லாம் ஒளியூட்டும். இராப்பொழுதைப் பகற்பொழுதெனச் செய்யும் இப்பண்டிகை மனவிருளை மனமாசை நீக்கி இதயத்தில் ஒளிபெறச் செய்வதுமாகும்.

வீட்டிலும் வளவிலும் முற்காலத்தில் தீபம் ஏற்றுவார்கள். வீட்டின் எல்லா அறைகளிலும் அடுக்களையில் பிரதானமாக அம்மியடியில் தீபமேற்றுவர். வளவில் கிணற்றடி, பனம்பாத்தியடி, தோட்டத்தடி எங்கும் தீப வரிசை நிறையும். வீட்டு வாசலிலும், வெளிப் படலையிலும் (வீதியோரத்தில்) விளக்கீடு செய்வர்.

### ஆலயங்களில் சொக்கப்பனை

ஆலயங்களில் கோபுர வாசலின் முன் பக்கத்தில் பேரொளி தருமளவில் சொக்கப்பனை கொளுத்துவர். இது சிவபெருமான் முன்னர் சோதி சொருபராகத் திருமாலுக்கும் நான்முகனுக்குங் காட்சி கொடுத்துத் தணிந்து லிங்க வடிவிலமைந்த திருவிளையாடலைக் குறிப்பதாம்.

### ஆலயங்களில் திருவிளக்கு

ஆலயந் தொழுவது சாலவு நன்று என்றாற்போல, ஆலயங்களில் விளக்கேற்றுதல் அரும்பெரும் பணியும் பெரும்பேறு பெறுவதற்கு அநுகூல சாதனையுமாகும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்." ஞானம் அகவிருளை நீக்குவதோடு இறைவனருளைப் பெறுவதற்கும் சாதனமாகும். சரியை, கிரியை, யோகம் என்னும் படித்துறையில் ஞானம் வரம்பிலா இன்பம் தருவதாகும்.

## கேதார கௌரி விரதம்

கௌரி விரதம் எனவும் வழங்கும் இவ்விரதம் கேதார ஈஸ்வரர் விரதமாகும். இது தீபாவளி அமாவாசையில் முடிவுறுவது வழக்கம். எனவே தீபாவளிக்கு முன்னுள்ள 21 நாள், அல்லது 18 நாள், அல்லது 7 நாள் விரத நாட்களாகக்கொள்வர். இவ்வாறுகொள்ள முடியாதவர் அமாவாசைக்கு முதல் நாளையாவது விரத நாளாகக் கொள்வர்.

### அநுட்டான முறை

இவ்விரதம் பெரும்பாலும் பெண்பாலாருக்கே உரியது. முதலில் விநாயகப் பெருமானை முறையாகப் பூசித்து வீட்டில் அம்மி குழவிகளை நன்றாகக் கழுவித் தூய்மை செய்து அலங்கரித்து, குங்குமஞ்சாத்தி அவற்றில் கேதார ஈஸ்வரரை எழுந்தருளுமாறு ஆவாகனப் பிரார்த்தனை செய்தல் முறை. அம்மி குழவிகட்கு முன் பூரண கும்பம் வைத்து அதனையும் அலங்கரித்துப் பொட்டிட்டுப் பூசித்தல் வேண்டும்.

ஆராதனை வழக்கம்போலப் பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், சந்தனம் என்பனவற்றோடு மஞ்சள், சர்க்கரை, உப்புக் கலவாத நைவேத்தியம் முதலியவற்றைப் படைத்துச் செய்யலாம் என்பர்.

இருபத்தொரு நாட்களிலும் இவ்வாறு செய்ய முடியாதவர்கள், இறுதி நாளன்று எல்லாம் இருபத்தொன்றாகப் படைத்துக் கொள்ளலாம்.

விரதத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று, இருபத்தொரு இழைகளால் ஆன ஒரு நூலை அணிதல்: அதில் நாள்தோறும் பூசையின் போது ஒரு முடிச்சுப் போட்டு இருபத்தோராம நாள் இருபத்தொரு முடிச்சுள்ளதாகத் தரித்தல் முறையாகும்.

### விரதத்தின் உட்பொருள்

அர்த்த நாரீஸ்வர மூர்த்தம் உண்மையில் அம்மையப்பர் வடிவமாகும். அம்மை அப்பரே உலகுக்கு அம்மையப்பர். தோடுடைய செவியன் எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியமையும் இதனை வலியுறுத்தும். அன்னை பராசக்தி இறைவனின் இடப்பாகத்தே அமைந்த அற்புத வைபவத்தைக் குறிப்பதே கேதார கௌரி விரதத்தின் பொருள்.

அம்மையார் அப்பன் பாகத்தைப் பெற்றாற்போலப் பெண்கள் தமக்கேற்ற மணாளனைப் பெறுதலும், மணாளனைப் பெற்ற மங்கையர் தங்கள் நாயகனைப் பிரியாதிருக்கும் பேற்றைப் பெறுதலும் இவ்விரதத்தின் பயனென்பர்.

**★ மனிதவர்க்கம் முழுவதும் உண்மையில் ஒரே குடும்பம் ★**

## தீபாவளி உள்ளொளி பெருக்கும்

தீபாவலி எனவும் வழங்கும் இப்பண்டிகை வடநாட்டிலிருந்து தெற்கே பரம்பியதெனக் கருத இடமுண்டு. வடக்கில் புதுவருட நாள் தீபாவளியை அடுத்து வருவதாகும்.

தீபாவளி என்பது தீப வரிசை. அது நாங்கள் விளக்கீட்டின் போது வீடுகளில் எங்கும் ஏற்றும் தீப வரிசை போன்றது.

ஐப்பசி மாதத்துத் தேய்பிறைக் காலத்தின் சதுர்த்தசி கூடிய வேளையில் விடியற் பொழுதில் தீபாவளி கொண்டாடப் பெறுகிறது.

வீடு வளவுகளை முதன் நாளே சுத்தஞ் செய்து, அதிகாலையில் நித்திய கடன்களை முடித்து எண்ணெய் தேய்த்துத் தலை முழுகிப் புத்தாடை புனைந்து, விருந்தினர் மத்தியில் உணவருந்தல் விதிக்கப்பட்டனவாகும்.

விருந்துக்கு முன்னர் ஆலய வழிபாடு, இயன்றளவு தருமச் செயல், பிதிர் வணக்கமாகச் சிராத்தம் முதலியன செய்தல் உத்தம கருமங்கள் என்பர். இன்னும் அன்று செய்யத்தக்க நல்ல கருமங்கள் பல. பசுக்களிடம் பால் கறக்காமல் கன்றுகளை ஊட்டவிடுதல், எருதுகள் முதலிய பிராணிகளை ஓய்வெடுக்க விடுதல், ஏழைகள், அனுதர்கள், நோயாளர் முதலானோரை மகிழ்வித்தல் என்பனவும் பிறவுமாம்.

தீபாவளி ஸ்நானம் எங்கே செய்தாலும் கங்காஸ்நானம் எனப் பெயர் பெறும் அளவில் இப்பண்டிகை புனிதமாகக் கருதப்பெறுகிறது. அன்று நல்லெண்ணெய் தேய்த்தல் இலட்சுமீகரமாகிறது.

---

## அருள் விருந்து

(ஆதாரம்: தர்மசக்கரம்)

1. சீலங்களுட் சிறந்தது பொறுமை.
2. பயங்கரத்தை அமைதியால் வெல்லலாம்.
3. பொதுமக்களை நல்லவர் ஆக்குவதே குடியரசு.
4. செய்த பாவம் ஒருபோதும் சமிபாடாகாது.
5. அவாவுள்ளவன் இங்கும் அங்கும் அலைகிறான்.
6. ஆசை, ஆணவம், சுயநலம் நீங்கவேண்டும்.
7. கடவுள் எங்கள் முன்னிலையில் இருக்கிறார்.
8. பாடுபட்டுச் சம்பாதித்ததே நமது பொருள்.
9. அறநெறியில் நிற்பவனைப் புகழ்தேடி வருகிறது.
10. புகழை நாடியோடுபவன் புன்மை அடைகிறான்.
11. கடமையில் அன்பிருந்தால் ஆற்றல் அதிகரிக்கும்.
12. கடமை செய்யத்தெரிந்தவன் நன்கு வாழ்கிறான்.
13. பிறர் நலம் கருதுவோர் சிறப்புப்பெறுகின்றனர்.
14. மனத்தூய்மை அடைந்தவர்கள் பாக்கியவான்கள்.
15. மேலானதை எவரும் அழித்துவிட முடியாது.

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. யௌவன இத்தாலி இயக்கத்தலைவர்?
2. செக்கோசிலோவகியா நாட்டின் முதல் தலைவன்?
3. புதிய சனநாயகம் எழுதிய சீனன்?
4. நிம்புஸ் என்னும் முகில் என்ன செய்யும்?
5. சூறாவளியின் சராசரி வேகம்?
6. ஜேமனியில் கப்பல் கட்டப்படும் இடம்?
7. உலகத்தை முதலிற் சுற்றிவந்த ஆங்கிலேயன்?
8. கனடாவில் எண்ணெய் ஊற்றுள்ள மாகாணம்?
9. பிரித்தானிய தொழிற்கட்சி முதற் பிரதிநிதி?
10. பெண்கள் வாக்குரிமைக்குப் பாடுபட்ட பெண்?
11. வயதுவந்தும் இளமையோடிருந்த பெண்ணழகி?
12. மிக மேற்கில் உள்ள பொதுவுடைமை நாடு?
13. கோதுமைக்குப் பெயர்போன அவுஸ்திரேலிய வெளி?
14. இந்தியாவில் நிலக்கரி உள்ள மாகாணம்?
15. அதிக வெப்பந்தரும் நிலக்கரியின் பெயர்?
16. விரைவாய் எரியும் நிலக்கரியின் பெயர்?
17. நுளம்பை அகற்றும் மில்க்வைற் தயாரிப்பு?
18. இந்தியாவில் பித்தளை வேலைக்குப் பெயர்போன இடம்?
19. அலுமினியம் அதிகமாகக்கிடைக்கும் நாடு?
20. சணலிலிருந்து தயாரிக்கப்படும் துணி?
21. கரும்பு முதலில் உண்டாகிய நாடு?
22. அதிக சீனி செய்யும் சிறிய நாடு?
23. கரும்பின் மிகக்கூடிய நீளம்?
24. முதிரை மரம் அதிகமுள்ள தீவு?
25. ரெலிவிஷன் கருவியைக் கண்டுபிடித்தவர்?

---

## புத்தகப் புதினம் ஆத்மீகச் சரக்கு

ஐரோப்பாக் கண்டத்திலே அவுஸ்திரியா நாட்டிலே வியன்னு நகரம் உலகப் புகழ் பெற்ற தலைநகரம். இற்றைக்கு இருபதாண்டுகளுக்கு முன் அங்கே உலகெங்கும் இருந்து புத்தக வெளியீட்டாளர் அறுநூற்றுவர் ஒன்று கூடி நாட்டுக்கு நாடு புத்தகம் பரப்புவதை வெகுவாக வற்புறுத்திப் பேசினார்கள். புத்தகங்கள் சாதாரண வர்த்தகப் பண்டங்கள் அல்ல. அவை ஆத்மீகச் சரக்குகள். அவற்றை ஏற்றுமதி இறக்குமதி செய்யும்போது எத்தகைய தடைவிதிப்போ வரிவிதிப்போ இடையூறாக இருக்கவொண்ணுது என்று பேசினார்கள்.

---

கோபமுண்டாகக்கூடிய காரணமுள்ளபோதும், கோபியாதிருக்கும் ஒருவரே கோபத்தை வென்றவர் எனலாம்.

— மகாத்மா காந்தி

---

★ ஆசைக்கு அடிமைப்பட்டவன் வறியவன் ★



## ஔவை அருந்தமிழ்

★

### வாழ்வில் இன்றியமையாதவர்களின் சிறப்பைப் பாடியது

தனிமரம் தோப்பாகாது. தனியொருவரின் ஏகாந்த வாழ்வு எவருக்கும் உபகாரமாய் இருக்கமாட்டாது. வாழ்வில் ஒருவர் பலருக்கும், பலர் ஒருவருக்காகவும் கைகொடுத்து வாழ்தலே சிறப்புடையதாகும். அதுவே இன்றைய ஒத்துதவி கூட்டுறவு என்பனவற்றின் அடிப்படையுமாகும். அது சமாதான சகவாழ்வுமாகும்.

ஒருவருக்குத் தாய் அருமையானவள். அவள் தன் பிள்ளைக்கு இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்னும் அறுசுவையுணவை ஆக்கி ஊட்டி வளர்ப்பவள். தாயில்லாத பிள்ளைக்கு இந்தச் சுகம் இருக்கமாட்டாது. தன் பிள்ளை அறிவாளியாய் வருதல் வேண்டும் என்று அரிதிற் பாடுபட்டுக் கல்வி கற்கவைப்பவர் தந்தை. தந்தையில்லாதபோது இந்த வசதியை மைந்தன் பெறுவது அருமை. ஒருவருக்கு மேலான செல்வம் என்பது அவரின் பிள்ளைப் பாக்கியம். பிள்ளை பிறந்து இறந்து போனால் அவருக்கு எல்லாச் செல்வமும் போனதற்கு நிகராகும். சுற்றத்துக் கழகு சூழவிருத்தல் என்பர். சுற்றந் தொடர்பு என்னும் சிரிய வாழ்வு அவர்கள் இல்லாவிட்டால் சிறப்புறமாட்டாது. தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான் என்பது பழமொழி. உடன் பிறந்தவன் இறந்துபோனால் ஒருவனுக்கு வலிமையில்லாதுபோய்விடும். ஒருவனின் வாழ்வில் இன்ப துன்பங்களில் பங்குபற்றி உறுதுணையாய் இருப்பவள் மனைவி. அவள் இறந்துபோனால் கணவனுடைய சிறப்புக்கள் யாவும் போய்விட்டதற்கு அறிகுறியாகும். பொன்னால் செய்யப்பெற்ற தாலி ஆகுபெயராய் மனைவியை உணர்த்துவது.

தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் — ஆயவாழ்
வுற்று ருடன்பிறப்பாற் றோள்வலிபோம் 
பொற்றாலி யோடெவையும் போம்.

---

## அரிச்சுவடி ஏடு

சென்ற விஜயதசமி நாளில் நாடெங்கும் பல்லாயிரக் கணக்கான அரிச்சுவடி ஏடுகள் அன்பளிப்புச் செய்வதில் ஆங்காங்கே விநியோகத்தராயிருந்து உதவிய அன்பர்களுக்கு நன்றி.

அடுத்த வருடம் இன்னும் பல்லாயிரம் ஏடுகள் தயாரிக்க வேண்டியிருப்பதால், அபிமானிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் தங்களால் இயன்றளவு ஓலைச்சார்வுகள் தந்துதவினால் இந்தத் தர்மப்பணியை நாம் முட்டின்றிச் செய்து தேவையைப் பூர்த்தி பண்ணலாம். நன்றி.

முற்றொடர்:-

## சைவச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 41. | வேதாங்கம் | — | வேதத்துக்கு உறுப்பான நூல்கள் |
| 42. | வைராக்கியம் | — | விடயங்களிற் பற்றின்மை |
| 43. | சுவார்த்தம் | — | தன்பொருட்டுச் செய்வது |
| 44. | பாரார்த்தம் | — | பிறர் பொருட்டுச் செய்வது |
| 45. | உபதேசம் | — | அறிவுறுத்தல் |
| 46. | அதீதம் | — | உயர்நிலை |
| 47. | பரமார்த்தம் | — | மேலான பொருள் |
| 48. | சித்தாந்தம் | — | முடிந்த முடிபு |
| 49. | அட்டமூர்த்தம் | — | எண்வடிவாக நின்ற இறைவன் |
| 50. | அமலன் | — | மலம் மாசில்லாதவன் |
| 51. | ஆட்கொள்ளல் | — | அடிமை கொள்ளல் |
| 52. | ஆண்டவன் | — | ஆட்கொண்டவன் |
| 53. | குருபரன் | — | ஞான ஆசிரியனாய் வந்த இறைவன் |
| 54. | சித்தர் | — | சிவனருள் பெற்ற பெரியார் |
| 55. | புலன் | — | பொறி, பொறியுணர்ச்சி அறிவு |
| 56. | போதம் | — | பேரறிவு |
| 57. | பரமசிவம் | — | மேலான மங்கலப் பொருள் |
| 58. | சரியை | — | சிவனுக்குப் பணிவிடை செய்தல் |
| 59. | கிரியை | — | சிவபூசை செய்தல் |
| 60. | யோகம் | — | சிவத்தைத் தியானித்தல் |

---

## அந்தகாரச் சிறை

முற்றாகக் கண்தெரியாதவர்கள் நிரந்தரமாக அந்தகாரச் சிறையில் அடைபட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வெளியுலகத்தையும் நூலறிவையும் பெறுவதற்கு நவீன சாதனங்கள் பெருகி வருகின்றன. யப்பான் தேசத்திலே பென்னம்பெரிய வெளிச்சவீட்டை நிர்மாணித்தவர் ஒரு குருடர். அவர் ஒருமுறை ஒசாக்கா நகரில் உள்ள சிறைக்கூடத்தில் பேசும்போது, குருட்டுப் பிள்ளைகளுக்கு உலகறிவு கொடுக்கக் கூடிய பிறெயிலி நூல்கள் தயாரிக்கப் பெறுதல் வேண்டும் எனக்குறிப்பிட்டதைக் கேட்ட கைதிகள் சிலர் அவற்றைத் தயாரிப்பதற்குத் தாம் முழுமூச்சாக ஒத்துழைப்பதாகக் கூறித் தம் ஓய்வு நேரங்களில் பிறெயிலி நூல்களைத் தயாரித்துக் கொடுத்தார்கள்.


---

## இலங்கையின் வடிவில் எவர்சில்வர் தட்டு

பனையபிவிருத்தி நிபுணர் இலங்கைக்கு வந்து ஆலோசனை கூறி மீண்டதன் நினைவாக இலங்கையின் வடிவில மைந்த எவர்சில்வர் தட்டில் அவர் பெருமையும் உபகாரிப்பும் கூறும் வாசகம் பொறித்துப் பிரியாவிடையின்போது மில்க்வைற் தொழிலதிபர் அன்பளிப்புச் செய்தார்.

---

★ ஆசையை வென்றவன் நிறைந்த செல்வன் ★



# பனை தந்த பட்டம்

தமிழ் நாட்டில் பனையபிவிருத்தியில் ஆராய்ந்த எண்மர் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளனர். அங்கே ஐந்து கோடி பனைகள் உள்ளன. பனைகள் வரிசையாய் நாட்டப் பெற்றுத் தோப்புக்களாயும் உள்ளன.

பனை பற்றி 30 வருட காலம் ஆராய்ந்த உத்தமர் திரு. கூ. சம்பந்தம். இவருக்கும் கலாநிதிப் பட்டம் கிடைத்துள்ளது. சம்பந்தம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபரின் பழைய நண்பர்.

மில்க்வைற் தொழிலதிபர் முயற்சியால் இலங்கைப் பனைச் சபை, கலாநிதி சம்பந்தம் அவர்களை ஒரு மாத கால ஆலோசனைக்கு இலங்கைக்கு வரவழைத்தது. வருகை புரிந்த சம்பந்தம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபருடன் பல இடங்களைப் பார்வையிட்டார்.

திருநெல்வேலியில் பண்டிதமணியிடம் அவரை அழைத்துப் போன வழியில் சீவல் தொழிலாளி ஒருவரைக் கண்டு தோழமையோடு தழுவி அவரின் கைகளிலும் நெஞ்சிலும் கால்களிலும் உண்டான தழும்புகளைத் தொட்டுப் பார்த்தார்.

தழும்பு உண்டாகாமல் பனை ஏற முடியும் என விளக்கினார். தமிழ் நாட்டில் பெண்களே பனையேறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்றெல்லாம் பேசினார்.

இன்று தமிழ் நாட்டில் பனை மரம் தேசிய மரமாகக் கணிக்கப் பெறுகிறது. முன்னர் பனம் பூ மாலை அணிந்த அரசர்கள் வாழ்ந்த நாடு. பனைக் கொடி பறந்த நாடு. பழம் பாரத நாடு.

பனை பதினான்கு ஆண்டளவில் பயன் தரத் தொடங்கி நூறாண்டுகள் தொடர்ந்து பயன் தரும். பசளையிடுதல் நீர் பாய்ச்சுதல் களை பிடுங்குதல் என்றின்னோரன்ன பாதுகாப்புகள் பனைக்குத் தேவையில்லை.

தமிழ் நாட்டில் பனையைத் தொட்டுப் பிழைப்பவருக்கு நல்ல மரியாதை உண்டு. ரீமேக்கர், றபர் மேக்கர் மாதிரி பனைத் தொழிலாளர் பதவியில் டவிசு உண்டு.

பனந் தொழில் வல்லுனர்கள் பலர் அங்கே நிபுணர் எனப் புகழ் மாலை சூடப் பெற்றுக் கணிக்கப் பெறுகிறார்கள்.

பனைத் தொழிலை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. பனையிலிருந்து இறக்குவது பதநீர். அது கள்ளாக மாறுகிறதேயல்லாமல் கள் வடிந்து வருவதில்லை. பதநீர் அருமையான பானகம்.

பதநீர் வெயிலேறியதும் கள்ளாக மாறுகிறது. அது கள்ளாக மாறுவதன் முன் அதனைப் பயன் செய்தல் வேண்டும்.

பதநீரிலிருந்து சீனி, வெல்லம், கல்லாக்காரம், கருப்பட்டி, குளுக்கோஸ், பாணி முதலியன செய்கிறார்கள். இனிய பானகம், சொக்கிளேற் முதலியன செய்கிறார்கள்.

வடலிப் பனை ஓலை விசிறி செய்ய உதவுகிறது. வடலி வளர்ந்து ஏழு எட்டு ஆண்டானதும் அதன் கங்கு மட்டைத் தும்பு அருமையான மூலப் பொருளாய்ப் பலவிதமான அற்புத பிறஸ் என்னும் துரிகை செய்யப் பயன் படுகிறது. ஒரு பனையில் சராசரியாக ஆறு கிலோ தும்பு கிடைக்கும்.

பனையோலையை வெட்டுவதால் பனையின் பதநீர் சுரப்பு அதிகரிக்கும். பதநீரைக் காய்ச்சிச் சீனி செய்வது ஆதாயந் தரும். பனஞ் சீனி உடம்புக்கு நல்லது. பதநீரை மகாத்மா காந்தியடிகள் ''நீரோ'' என வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளார்.

## அடுக்குமொழி அகராதி

முற்றொடர்:

1. வானகமும் வையகமும்
2. வானவரும் தானவரும்
3. விக்கி விக்கி
4. விசித்து விசித்து
5. விட்டகுறை தொட்டகுறை
6. விடேன் தொடேன்
7. விண்டலமும் மண்டலமும்
8. விண்ணும் மண்ணும்
9. விம்மலும் அழுகையும்
10. விம்மி விம்மி
11. விம்மி வெதும்பி
12. வியர்க்க விறுவிறுக்க
13. வியந்து நயந்து
14. வியப்பும் திகைப்பும்
15. வியப்பும் நயப்பும்

★ மனமாசு நீங்கினால் பெருவாழ்வு கிடைக்கும் ★

# தமிழர் கண்ட தத்துவ நெறி

தமிழரின் பாரம்பரியமான தத்துவ நெறிக் கொள்கை மிகவும் பழையது. அது மிகப் பழைய தமிழ் நூலான தொல்காப்பியத்தில் பரக்கக் கூறப்பட்டுள்ளது. பொருளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகுத்த தொல்காப்பியர், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நிலத்தை வகுத்து, ஆங்காங்கே வணக்கத்துக்குரிய தெய்வங்களையும் கூறுவர். மாயோன், சேயோன், வேந்தன், வருணன் எனத் தெய்வங்களின் திருநாமங்களைக் கூறியவர், தெய்வம் ஒன்றே என்பதைக் கடவுள் என்றும் முனைவன் என்றும் கூறுவர்.

தூய மெய்யுணர்வே இறைவன் திருமேனி என்பர். அவன் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன் என்பர். அவனையே திருவள்ளுவரும் வாலறிவன் எனக் கூறியுள்ளார். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களின் கலப்பே உலகம் என்ற தொல்காப்பியர், அதனைத் தந்தவன் இறைவன் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.


கடவுள், உலகம் என்பனவுக்கு வேறாக உயிர்கள் உள்ளன என்று கூறியுள்ளார். உயிர்களை மன்னுயிர் என்பதால் அவை அழியாதன என்பது பெற்றாம். அவை தொல்லுயிர் எனப்படுவதால் பழையவை என்பதும் அறியக் கிடக்கிறது. உயிர் என்றாலே உணருந் தன்மையுள்ளது என்பது கருத்தாகும். உயிர்களுக்கு ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ளன. மரஞ் செடி முதலியன ஓரறிவுள்ளன. நத்தை, சங்கு, சிப்பி முதலியன ஈரறிவும்; எறும்பு, கறையான் முதலியன மூவறிவும்; நண்டு, தும்பி முதலியன நான்கறிவும்; மக்கள் ஐந்தறிவும் உள்ள உயிர்க் கூட்டமாம்.

உயிர் தான் எடுத்த உடம்பை விட்டுச் செல்லும் இயல்பினையுடையது. சென்றவுயிரின் நின்றயாக்கை என வருந் தொடர் கவனிக்கத்தக்கது. உயிரையும் உடம்பாகிய மெய்யையும் தமிழிலக்கணத்திலேயே உயிர் எழுத்து, மெய்யெழுத்து என வகுத்துக் காட்டியுள்ளார். உடம்பை இயக்கும் உயிர்போல் உயிரெழுத்து மெய்யெழுத்தை இயக்கும் என்பதுஒரு விளக்கம்.

உயிரை உடம்பினின்றும் பிரிப்பதற்கு ஒரு தெய்வ ஆற்றல் உண்டென்றும், அதனை மாற்றும் ஆற்றல் உயிருக்கு இல்லை என்றும் கூறுவர். உடம்பு நிலையில்லாததாயினும் அது நிற்கும்போது அதனுதவி கொண்டு நல்வினைகளைச் செய்தல் வேண்டும். அவற்றால் சிறப்பென்னுஞ் செம்பொருளைக் காணலாம். அச்செம்பொருளே இறைவன்.

இன்னும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் இருவினைகளே என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். ஊழ் என்று ஒன்றுண்டு. அதைப்பால் என்றும் பகருவர். பாலைப் பற்றுக்கோடாகக் கொண்டே தெய்வத்தின் ஆணையால் எமக்கு எல்லாம் நடக்கின்றன. ஊழ் ஒன்று படுத்தும். அது வேறுபடுத்தும். ஆகவே அதனை ஆகூழ் என்றும் போகூழ் என்றும் கூறுவர். ஊழ்வினைதானே வந்து எம்மைப் பற்றுதல் முடியாது. அதை ஊட்டுபவன் இறைவன். அவன் ஆணையால் தான் வினை நம்மைச் சேர்ந்து பயன் தருகின்றன. இறைவனை வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்பர். அவரைப் பால் வரை தெய்வம் எனவும் கூறுவர்.

ஓர் உயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரிடத்துப் போகாமல் செய்தவனையே சென்று பயனளிக்கும்படி செய்பவன் இறைவன். அவரையே வகுத்தான் என்று திருவள்ளுவர் அருமையாகக் கூறியுள்ளார். வகுத்தான் வகுத்தபடியல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. இதனை மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருச்சிற்றம்பலக் கோவை என்னும் திருக்கோவையாரில் சிற்றம்பலத்தான் அமைத்த ஊழின் வலியதொன்றென்னை என அருளியுள்ளார்.



# Moral Lessons

(Swami Sivananda)

## BE PUNCTUAL

Time is most precious. You will miss your lessons if you go to school late. You will miss the train if yon do not go to the station at the right time.

Get up early and start your work at the right hour. Be punctual in attending any meeting.

See, nature is also punctual. The sun rises at the right hour. Seasons come in the right time. If you are not punctual your life will be a failure. If you are punctual it will be a great success. If you form the habit of being punctual it will always help you to do all your work at the right time.

## Great Sayings

1. Necessity is the mother of invention.
2. Patience is the best remedy for troubles.
3. The bad live to eat, the good eat to live.
4. Pride the never failing voice of fools.
5. Charms strike the sight, merit wins the soul.
6. This long desease, my life.
7. An honest business never bluss to tell.
8. Too much of rest becomes a pain.
9. What cannot be cured must be endured.
10. There is no greater wisdom than kindness.
11. They also serve who only stand and wait.
12. Fortune and love befriend the brave.
13. Meet the disease at its first stage.
14. Patience it the remedy for trouble.
15. Pride is the vice of fools.

★ மனமாசு நீங்கினல் பெருவாழ்வு கிடைக்கும் ★

## சுக்கிர நீதி

கற்ப சூத்திரத்திலே பல தரும சாத்திரங்கள் அடங்கி உள்ளன. இவற்றைச் செய்தவர்களுள் கௌதமர், ஆபத்தம்பர், போதாயனர், வசிட்டர், விஷ்ணு முதலானோர் சிறந்தவர்கள். இவர்களுக்குப் பின் வந்த முனிவர்கள் பலரும் தரும சாத்திரங்களைச் செய்துள்ளார்கள். அவர்களுள் மநு என்பவர் பெரும் புகழ் பெற்றவர். அவர் செய்த மனுஸ்மிருதி, மநுதர்ம நீதி என வழங்குகிறது. மநுநீதி பெரிதும் வியாபகமுற்றதால் நீதிக்கே மநு என்றும், நீதிகளைத் தொகுப்பவருக்கும் மநு என்றும் பெயர் வழங்குவதுண்டு. மநுஸ்மிருதி மிகவும் பழையது.

தரும சாத்திரம் ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்னும் மூன்று பகுதிகளை விரித்துக் கூறும். ஆசாரம் என்னும் பகுதியில் சமூகம், சாதி, கடமை என்பன கூறப்பெற்றுள்ளன. வியவகாரம் என்னும் பகுதியில் சட்டங்கள், குற்றங்கள், தண்டனைகள் கூறப்பெற்றுள்ளன. பிராயச்சித்தம் என்னும் பகுதியில் பாவங்களுக்குப் பிராயச்சித்தங்கள் கூறப்பெற்றுள்ளன.

நீதி நூல்களுள் சுக்கிர நீதி என்பதும் ஒன்று. அது சுக்கிராசாரியார் என்னும் வெள்ளியால் எழுதப்பெற்றது. சுக்கிர நீதிகளுள் 55 நீதிகள் 1982ஆம் ஆண்டில் தொழிலதிபரின் 55ஆம் பிறந்த நாளில் அச்சேறியுள்ளன.

## நவராத்திரி வெளியீடுகள்

இம்முறை நவராத்திரி காலத்தில் மில்க்வைற் வெளியீடுகள் மிக்க சிறப்புடையனவாக அமைந்துள்ளன. நவராத்திரி நாயகிக்கான பாடல் தொகுதி, துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி மூவரும் அமர்ந்த மூவர்ணப் படம், தாமரை மலர்மேல் காயத்திரி தேவியின் படமும் மந்திர சுலோகமும் பெருந்தொகையாக விநியோகமாயின. இன்னும் சைவச் சிறுவர்களுக்கு வித்தியாரம்பத்துக்காக விஜய தசமி நாளில் பல்லாயிரக்கணக்கான ஏடுகள் நாடெங்கும் விநியோகமாயின.

## ஆய கலைகள்

பாரத நாட்டின் பலவித கலைகளில் தம் மனத்தைப் பறிகொடுத்த பிறநாட்டவருள் அல்பிரூணி என்னும் முஸ்லீம் பெருமகனும் ஒருவர். இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பிறந்த அவர், இந்தியாவைப் பற்றி நேரிலறிவதற்காக இந்நாட்டுக்கு வந்தார் என்பர். இந்தியாவில் தங்கியிருந்து சமஸ்கிருத மொழியை நன்கு கற்று இந்திய நூல்கள் பலவற்றைத் தமது தாய் மொழியாகிய அரபு மொழியில் பெயர்த்தெழுதினர். அவர் இந்தியாவைப்பற்றி எழுதிய நூலில் இங்குள்ள ஒவ்வொரு பொருளைப் பற்றியும் விபரித்துக் கலைக் களஞ்சியம் எழுதியுள்ளார். அன்றிப் பாரதப் பண்பாட்டைப் பற்றி வெகுவாகவியந்து எழுதியுள்ளார். அதில் இந்தியரின் பலவித கலைகளைப் பற்றியும் விபரித்துள்ளார்.

தாமே தலைசிறந்த சோதிடராக விளங்கிய அல்பிரூணி இந்தியரின் சோதிடத் திறமைக்குப் பெருமதிப்பும் வியப்பும் காட்டியுள்ளார். இந்திய சோதிட முதல்வரான வராகி மிகிரர் எழுதிய லகு சாதகம் என்னும் நூலின் மகிமையைப் போற்றியுள்ளார்.

"ஒரு குழந்தை பிறந்த நேரத்தில் அதன் தந்தை அருகில் இருந்தானா, அந்த அறையில் ஒளி வீசிய விளக்கு எப்படிப்பட்டது, அது எந்தப் பக்கத்தில் இருந்தது என்றெல்லாம் சாதகத்தைக் கொண்டு கண்டு கூறக்கூடிய சோதிடர்கள் இந்தியாவில் இருந்தார்கள்'' என்பர்.

## மலேசிய அன்பரின் சைவநெறி

மலேசிய அன்பர் சி. வேலுசுவாமி அவர்கள் தம்மாலான மட்டும் சைவமும் தமிழும் பரப்புகின்றார். தலைமையாசிரியராயிருந்தவர் இப்போது ஓய்வுபெற்று முழுநேரத் தொண்டு புரிவதில் முயன்று வருகிறார். இவர் முன்னர் சைவத்தமிழ் வெளியீடுகள் பலவற்றை வெளியிட்ட அநுபவசாலி. தொடர்ந்து எஸ். வி. கிருஷ்ணன் என்பாரை நிர்வாகியாகக் கொண்டு திருமகள் வெளியீடு ஆரம்பித்து நடத்துகிறார்கள்.

இவர்கள் பக்தி என்னும் திங்கள் ஏடொன்றைச் சென்ற ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆரம்பித்து அருமையாக நடத்துகிறார்கள்.

## மாவிட்டபுரத்தில் மகத்தான மரம் நாட்டுவிழா

வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திருவாட்டி சச்சிதானந்தம் அவர்கள் எடுத்த பெருமுயற்சியால் மில்க்வைற் தொழிலதிபர் 30-10-82 சனிக்கிழமை மகாவித்தியாலயச் சூழலில் மரங்கள் பலவற்றை நாட்டினார்.

அம்மையார் மகாவித்தியாலய வளவில் நூற்றுக்கணக்கான தென்னம்பிள்ளைகளை நாட்டி வளர்ப்பதற்கும் முயற்சி எடுத்து வருவதைப் பாராட்டி வாழ்த்தி, மாவைப் பெருமான் திருவருள் நிறைவதாக என வணங்குகின்றோம்.

## சனி நீராடுதல்

எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவோருக்குப் பிசான் முதலிய அழுக்குகளையும் நீக்க வல்லது ஒலிவ் ஸ்நானப் பவுடர். இது மில்க்வைற் தயாரிப்பு. அரப்பும் வேறு சில மூலிகைகளும் மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப் பெற்ற இது நாட்டில் பெரிதும் பாராட்டப் பெற்று வருகிறது. பைக்கற் ஒன்றின் விலை சதம் 50.

### விடைகள் இவை

1. மாஜினி. 2. மசாறிக. 3. மாசேதுங். 4. மழை தரும். 5. மணிக்கு 60 மைல். 6. பிறீமன். 7. பிறுன் சிஸ்டிறேக். 8. அல்பேட்டா. 9. கெயர்காடி. 10. ஸ்ரீமதி பான்கேஸ்ற. 11. எகிப்திய கிளியபற்ற. 12. கியூபா. 13. நிவநினு. 14. பீகார். 15. அந்திரசைட் 16. பிடுமென். 17. நீம்தூபம். 18. கும்பகோணம். 19. கயானு. 20. லினன். 21. இந்தியா. 22. கியூபா. 23. இருபது அடி. 24. இலங்கை. 25. சேர். யோன்லொஜிபெயாட்.

## அறிந்துகொள்ளுங்கள்

1. திருமூலர் காலத்தில் இந்தியாவில் 18 மொழிகள் நிலவின.
2. சித்தர்கள் பல மொழிகளறிந்த பண்டிதர்கள்.
3. இறைவன் எங்கள் அறிவுக்கு அப்பாற்பட்டவன்.
4. இறைவனை அநுபவத்தால் அறிவதே பேரறிவு.
5. சில மீனினம் ஒரே முறையில் 70 லட்சம் முட்டைகள் இடுவதுண்டு.
6. திருக்குறளில் 12000 சொற்களில் 11950 தமிழ்ச் சொற்கள்.
7. பியட் கார் இத்தாலி நாட்டைச் சேர்ந்தது.
8. எண்ணெய் முழுக்குக்கு மில்க்வைற் ஒலிவ் பவுடர் உகந்தது.
9. நுளம்பைத் தூரக் கலைப்பது மில்க்வைற் நீம் தூபம்.
10. நிலக்கரி நன்ருக முற்றி வைரமாக விளைகிறது.
11. மனித உடலில் கல்லீரல் மிகப் பெரிய சுரப்பி.
12. காய் கனிகளில் நெல்லியைவிடச் சிறந்தது எங்கு மில்லை.
13. பிள்ளைகள் அச்சங் காரணமாகக் கொன்னை தட்டுவது உண்டு.
14. வானத்துச் சந்திரன் 2000 மைல் குறுக்களவு உள்ளது.
15. சாசுவதப்பொருள் என்ருல் என்றும் உள்ளது.
16. உபதேசம் என்பது குரு உடனிருந்து உணர்த்தியது.
17. நந்தி என்பது திருமூலர் சிவனைக் குறிக்கும் மங்கலச் சொல்.
18. கிருச்சிரம் என்பது ஆயிரம் பசுக்களைக் கன்றுகளுடன் கொடுப்பது.
19. ஸ்தண்டிலம் என்பது சாணியால் மெழுகப் பெற்ற நிலம்.
20. காரிகை என்பது கர்மாக்களை ஒழுங்காகக் கூறுவது.

## சிவதீட்சை பெறுவோம் சேரவாரீர்

உலகத்தில் இருளை அகற்றி ஒளி செய்வது சூரியன். சூரியனை எதிர்க்கும் இருள் அசுரத் தன்மை வாய்ந்தது. இருளாகிய அசுரத் தன்மையை நீக்குவதற்குச் சந்தியா வந்தனம் செய்தல் வேண்டும்.

சந்தியா வந்தனத்தில் மந்திரங்கள் சொல்ல வேண்டும். மந்திரங்கள் சொல்வதற்குத் தகுதியையும் மேலான அறிவையுந் தருவது தீட்சை. தீட்சை என்பது திருவருள் பதிவதற்கு உடம்பைச் சுத்தம் செய்வது.

தீட்சை பலவிதமாகக் கிடைப்பது. பார்வையால், தொடுவதால், பாவனை செய்வதால், ஆகமத்தால், ஔத்திரியால் என அவை பல வகைப்படும். தீட்சை பெறுவதால் நாம் சமயப் பிரவேசம் செய்தவராவோம். திருவருள் பெறுவதற்குத் தகுதி உள்ளவராவோம். மந்திரம் சொல்வதற்கு யோக்கியராவோம். நல்லவர்களாய் நல்லனவே செய்யும் மேலோராவோம்.

அடுத்து வரும் ஐப்பசி வெள்ளியைப் பயன் படுத்தித் தீட்சை பெறுவோம். ஆலயங்களில் சைவக் குருக்கள் மாரைக் கொண்டு வசதியாகத் தீட்சை வைத்து மூன்று நாட்களாவது அவரிடம் அநுட்டான விதிகளை அறிவோம்.

தீட்சை பெறுபவர்களுக்கு மில்க்வைற் தொழிலதிபர் நித்திய கருமவிதி இலவசமாகத் தருவார். சிவனை மறவாது நீருநீறு பூசி மனிதருள் தேவராய் வாழ்வோம். சேர வாரீர். சைவம் வாழ்க. நீங்கள் வாழ்க.

## தமிழில் வழங்கும் ஆங்கிலச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 74. | குயினையின் | = | Quinine |
| 75. | கொக்கோ | = | Cocoa |
| 76. | கோச் | = | Coach |
| 77. | கோற் | = | Coat |
| 78. | கோர்ட் | = | Court |
| 79. | கவுண்சில் | = | Council |
| 80. | சப்பிளை | = | Supply |
| 81. | சேர்க்கஸ் | = | Circus |
| 82. | சேவயர் | = | Surveyor |
| 83. | சோக் | = | Chalk |
| 84. | சிம்னி | = | Chimney |
| 85. | சிவில் | = | Civil |
| 86. | சினிமா | = | Cinema |
| 87. | சீல் | = | Seal |
| 88. | சுப்பிறின்டன் | = | Superintendent |
| 89. | சூப் | = | Soup |
| 90. | செக் | = | Cheque |
| 91. | செற் | = | Set |
| 92. | செயின் | = | Chain |
| 93. | சென்ரர் | = | Centre |

## தமிழ் மணக்கும் இடமெல்லாம் புகழ் மணக்கும்

தமிழ் நாட்டுப் பனையபிவிருத்தி நிபுணர் கூ. சம்பந்தம் அவர்கள் இலங்கை அரசறிய இங்கே வந்து பனைச் சபைக்கு ஆலோசனை கூறிய வேளையில், தொழிலதிபர் கனகராசாவின் விருந்தினராயும் இருந்தார். கனகராசா அவர்களின் பன்முகப் பணிகளைப் பல்லாண்டுகளாகக் கேட்டறிந்த அவர் இம்முறை அவற்றையெல்லாம் நேரிலறிந்து தமது இதய பூர்வமான பாராட்டையும் வாழ்த்தையும் எழுதிப்போயுள்ளார்.

"பணம் பெற்று பனைத்தொழிலை
பரப்புகிறேன் பாரத நாட்டில்
பணம் விட்டுப் பனை வளர்க்கும்
பெருமை பெற்றீர் ஈழநாட்டில்
தமக்கென வாழாத கற்பகத்தை
உமக்கென வரித்துக் கொண்டீர் ஈழநாட்டில்
பனைவாழும் காலமெல்லாம் நும்புகழ்வாழ்க!
தமிழ் மணக்கும் இடமெல்லாம் நும்புகழ்
மணக்கும்."

★ நல்ல செயலுக்கு இயற்கை இடந்தருகிறது ★

## தட்சிணு மூர்த்தம்

ஆண்டவன் படைப்பில் நாமெல்லோமும் எவ்வளவு சிறிய வஸ்துக்கள் என்று காட்டுவது ஆலமரம். ஆலமர நிழலில் தேர்ப் படை, ஆனைப் படை, குதிரைப் படை, காலாட் படை எனவுள்ள நாற்பெரும் படைகளும் ஒரே சமயத்தில் தங்கி இளைப்பாறலாம். ஆல் போல் தழைக்கும் மரம் வேறெதுவுமில்லை. ஆலமரத்தினடியில் தான் சனகர், சனந்தனர், சநாதனர், சனற்குமாரர் ஆகிய பெரியவர்கள் உணர்தற்கரிய பெரிய ஞானத்தை உணரப் பெற்றுர்கள். ஆலமரத்தடியில் உண்டாகும் தனிப்பட்ட வுணர்ச்சி ஏகாந்தம். அங்கே ஆசையும் பயமும் விருப்பும் வெறுப்பும்அணுகுவதில்லை; ஆலமரத்தடியில் அறிவு விருத்தியாகும்.

## அருள் மூர்த்தங்கள்

சிவப்பரம் பொருள் காலந்தோறும் அன்பர்களுக்குக் காட்சி கொடுத்தருளி ஆட்கொள்வதற்குக் கொண்டருளும் அற்புதத் திருமேனிகள் என்னும் அருள் மூர்த்தங்களாய சிவ மூர்த்தங்கள் பல வகைப்படும் என்பர்; அவை சோமாஸ்கந்தர், நடராசப் பெருமான், கலியாணசுந்தரர், இடபாருடர், சந்திரசேகரர், பிட்சாடணர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி, கசாரி, வீரபத்திரர், தட்சிணுமூர்த்தி, கிராதர், நீலகண்டர், கங்காளர், சக்ரதானர், கஜமுகானுக்கிரகர், சண்டேசானுக்கிரகர், ஏகபாதர், இலிங்கோற்பவர், சகாசீனர், உமாமகேஸ்வரர், அரியத்தர், அர்த்தநாரீஸ்வரர் என்பனவும் பிறவுமாம்; சிவ பெருமானே முழுமுதற் கடவுள். அவரை வணங்குவோம்; அவரை நினைந்து என்றும் எப்போதும் திருநீறு பூசிக் கொள்ளுவோம்.

## ஆபிரிக்க நாகரிகம்

வரலாற்றுசிரியர் சிலர் தம்மனம் போனவாறெல்லாம் சரித்திரத்தைத் திரித்து வரைந்துள்ளார்கள்; இருண்ட கண்டம் எனப்பெயரிடப்பட்ட ஆபிரிக்காவின் வரலாறு ஐரோப்பியர் பதினைந்தாம் நூற்றுண்டில் அங்கேபோன பின்னரே ஆரம்பித்தது என எழுதுவாராயின் அதனைவிட வேறு புரட்டு இல்லை எனலாம்.

உகண்டாவில் காணப்படும் மிகப்பழைய மட்பாண்ட வேலைப்பாடுகள், தங்கனிக்காவில் நடைபெற்ற வர்த்தகப் பெருக்கம் என்பன இந்திய நாட்டின் இணையில்லா நாகரிகத்தோடு இணைந்த வரலாற்றைக் குறிக்கின்றன என அறியக் கிடக்கிறது. சாஞ்சிபாரில் ஏழாம் நூற்றுண்டைச் சேர்ந்த சீனக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மிகப் பழைய எகிப்திய நாகரிகம் நைகர் நதிக்கரை வரை பரவியிருந்தது. எதியோப்பியா ஒரு பேரரசாக விளங்கியது. றேடேசியாவில் நிலவும் சாம்பாவே நாகரிகம் பழைய இந்திய நாகரிகத்தோடு மிக நெருக்கமானதாக அமைந்ததொன்றுகும். இந்தியரின் செல்வாக்கு அங்கெல்லாம் 1200 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்திருந்தது; நவீன வரலாற்றுசிரியர்கள் பழைய வரலாற்றையும் படித்தறிதல் புத்திசாலித்தனமாகும்.

## நித்திய கருமவிதி


ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த நித்திய கருமவிதி, சிவதீட்சை பெறுவோர்க்கெல்லாம் இலவசமாக வழங்கப் பெற்று முடிந்துவிட்டதால், மீண்டும் அதனை அச்சிடுகிறோம். இம்முறை வெளிவரும் புதிய பதிப்பில் கூடிய விளக்கம் தரப்பெற்றுள்ளது.

நாட்டின் நாலுபக்கங்களிலும் சைவம் வளர்க்கும் மன்றங்கள், தாபனங்கள், ஆச்சிரமங்கள் யாவும்; பெரியவர்கள், தொண்டர்கள் யாவரும் பிள்ளைகள் சிவ தீட்சை பெற்றுக்கொள்வதில் கருத்துடன் செயலாற்றுவார்களாக; சபைகள் மன்றங்கள் மூலம் முன்கூட்டியே மில்க்வைற் தொழிலதிபரிடம் விண்ணப்பித்து தீட்சைப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்வாராக. நன்றி.


நீம் சுகாதார தூபம்

மழைக்காலத்தோடு
நுளம்பும் இலையானும் அதிகமாகப்
பெருகி உபத்திரவந் தருகின்றன.
இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப்
புனிதத்தையும், கணகணப்பையும்,
லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்

நீம் சுகாதார தூபம்




"மில்க்வைற்" நீம்சுகாதார தூபத்தை
தணலில் இட்டுப் புகைத்துப் பாருங்கள்.
எவரும் வாங்கக் கூடியதாக
50 சதம் பெறுமதியான பைகளில் உண்டு.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம்; யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்,
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-11-82.